# கம்பர் வழியில் கர்நாடக இசை பாடல்கள்

1

முனைவர் ச.ரம்யா
செட்டிநாடு வித்யாஷ்ரமம் பள்ளி, சென்னை.
aadarshiniaayushi@gmail.com

**முகப்பு:**

உலகின் பழமையான மொழி என்பதை விட இன்று நமது நாட்டில் பேசப்படும் தென்னிந்திய மொழிகளில் பல மொழிகளுக்கு தாயாய் விலங்கும் செம்மொழி நமது தமிழ் மொழி என்பதே தமிழுக்கு பெருமை. அப்படிப்பட்ட மொழிக்கு சிறப்பு சேர்த்தவர்கள் வள்ளுவனும் கம்பரும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த கம்பரின் படைப்புகளில் சிறப்பு கம்ப இராமாயணம். கம்பஇராமாயணத்தில் காணப்படும் கருத்துக்கேற்ப கர்நாடக சங்கீதத்தில் காணப்படும் பாடல்களை ஒப்பீடு செய்வது இவ்வாய்வு.

**ஆய்வின் நோக்கம்:**

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி" என்பது தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் மிக மூத்த, நீண்ட வரலாற்றைக் குறிக்கும் பாடல் வரிகளாகும். (1) தமிழ் மொழிக்கு மேலும் பெருமை சேர்ப்பது உலகளவு புகழ்பெற்ற கம்ப இராமாயணம். அன்று தனது சொல்லல் தமிழுக்கு பெருமை சேர்த்த கம்பரின் பாடல்களைப்போல இன்று தனது கர்நாடக பாடல்கலில் சேர்த்து ஒளியும் ஒலியும் கூட்டி உருக்கொடுத்த சில வாக்கேயர்களின் படைப்பின் அழகினை எடுத்து இயம்புவதே இவ்வாய்வின் நோக்கம்.

**திறவுச்சொற்கள்:** கம்ப இராமாயணம், பக்தி, இசை, கிருதிகள், படலம், தியாகராஜர், அருணாச்சல கவி

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்தியாவைப் பொறுத்தளவில் இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்கள் என்றழைக்கப்படுகின்றன. இதிஹாசம் எனப்படுவது பெரும் வீரர்கள் நிகழ்த்திய அரும்பெரும் வீரச் செயல்களையும், நீதிநெறிகளையும் விவரிக்கும் வரலாறாகும். இதி-ஹ-ஆஸ என்பதற்கு "இப்படி உண்மையில் இருந்தது"- என்று அர்த்தமாகும். வால்மீகி மகரிஷி இயற்றிய இராமாயணம் காலத்தால் மகாபாரதத்திற்கு முற்பட்டது. ஆகையால் இதை “ஆதி காவியம்” என்று அழைப்பார்கள். மகரிஷி வால்மீகி அவர்கள் இராமாயண காவியத்தில், பாரதத்தின் அன்றைய கலாச்சாரம், மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு,

அரசர்களின் நீதி, கலைகளின் சிறப்பு, என்று அனைத்தையும் விளக்கமாக எடுத்து உரைத்திருக்கிறார். வேதத்தின் படி மனிதன் வாழ வேண்டிய வாழ்க்கை தர்மம் என்ன என்பதை போதிக்கும் இசை காவியமாக இராமாயணத்தை படைத்திருக்கிறார். வால்மீகி மகரிஷியை பின்பற்றி கம்பர் இயற்றிய காவியம் கம்ப இராமாயணம். வால்மீகி இராமாயணத்தில் மனிதரில் உத்தம புருஷனாக தோன்றிடும் இராமனை கம்பர் தனது இராமாயணத்தில் மானுடப்பண்புகள் கொண்ட இறைவனாக காட்டி சிறப்பித்துள்ளார். கம்பனுக்குச் முன்பு வாழ்ந்த ஆழ்வார்கள், தங்களின் திவ்ய பிரபந்தப் படைப்புகள் மூலம் ராமரை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்தனர் (2) என்றாலும், கம்பரோ அவர்களுக்கும் மேலாய் வால்மீகியின் இராமாயணத்தை முழுமையாய் தமிழில் காவியமாய் செய்தார். கம்ப இராமாயணத்தில் உள்ள சொல்லழகு அக்காவியத்தை இலக்கண சிறப்பு மிக்கதாய் எடுத்துக்காட்டுகிறது. அவற்றின் சந்த நயம், உவமை நயத்திற்கு ஏற்ப இன்று கர்நாடக சங்கீதத்தில் தமிழ்,தெலுங்கு மற்றும் வடமொழியிலும் இனிமையாக இயற்றப்பட்ட சில பாடல்களை எடுத்துக்காட்டி, விளக்கி ஒப்பீடு செய்வதே இவ்வாய்வு.

**முன்னுரை:**

"பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு" என்று பாரதி நமது நாட்டினை புகழ்ந்து பாடுகிறார். நமது இந்தியநாட்டிற்கு உலகளவில் பெருமை சேர்த்த இதிகாசமான இராமாயணத்தை தமிழில் சொற்சுவையும் பொருட்சுவையும் ததும்ப தந்தவர் கவியரசர் கம்பர். தனது பாடல்களில் நமது தமிழ் பண்பாட்டினை ஆழத்துடன் விளக்கி இராமாயணத்திற்கே பெருமை சேர்த்தவர். கம்பராமாயணத்தில் பல பாடல்கள் இன்றைய கர்நாடக சங்கீதத்தில் பற்பல ராகத்தில் விருத்தங்களாக பாடப்படுகிறது. நாடகப் பாணி மாறாத அமைப்பு, கதைப் பொருளின் சிறப்பு, கற்பனை வளம், கவிதை நயம், உணர்வுகளுக்கு ஏற்றபடி சொற்களின் நடை, பாத்திரங்களின் படைப்பு என பற்பல சிறப்புகளால் ஒப்புயர்வற்ற காவியமாக மிளிர்கிறது. கம்பருக்கு பின் தோன்றிய பலரும் அவரை பின்பற்றி இராமனை திருமாலின் அவதாரமாக பாடியுள்ளார்கள். தென்னிந்திய இசையான கர்நாடக இசையில் இராமனை போற்றி பல பாடல்களை இயற்றி உள்ளனர்.

**இசையும் பக்தியும்:**

இசை என்ற சொல்லுக்கு இசைவிப்பது, வயப்படுத்துவது ஆட்கொள்வது என்று பல பொருள் உண்டு. நமது தேசத்தின் இசையும் பக்தி மார்க்கத்தின் பாகமாகவே விளங்குகிறது. தென்னிந்தியாவில் சங்ககாலத்திலேயே தமிழிசை இயல்,

இசை, நாடகமென முத்தமிழுக்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது. அதற்க்கேற்ப பக்தி இயக்கம் முதலில் தமிழ்நாட்டில் தோன்றி இசையின் துணையோடு இந்திய முழுவதும் பரவியது. இதற்கு சான்றாக நம் தேவார பாடல்களின் பண்கள் பற்றிய குறிப்புக்கள் பழமையான சமஸ்கிருத நூலான பிருகதேசியில் காணப்படுகின்றன(3). பல நூற்றாண்டுகள் கடந்தும் இப்பாடல்கள் இணையில்லாததாக விளங்குகிறது. காலத்துக்கேற்ப இசையும் பல மாற்றங்கள் அடைந்து, இக்காலத்தில் புதிய வடிவத்தில் மிக எளிமையானதாக உரு பெற்றது. இன்று நம்மிடமுள்ள இசைவடிவங்கள் வர்ணம், கீர்த்தனம், கிருதி போன்றவைகள்.

**பக்தி மார்க்கம்:**

பக்தி என்பதை அர்ப்பணிப்பு, மரியாதை அன்பு என்று கொள்ளலாம். நமது வேத சாஸ்திரத்தில் "நமே பக்தஹ ப்ரணஸ்யதி" (4) என்று கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் - பகவான் "என் பக்தனை நான் எப்பொழுதும் கைவிட மாட்டேன்" என்று உறுதி கூறுவதாகும். நமது நாட்டின் தோன்றிய நூல்கள் பலவும் இறை பக்தியை எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றது. வால்மீகி இராமாயணமும் அவ்வாறே திகழ்கிறது. வால்மீகி மகரிஷியை பின்பற்றி கம்பர் இயற்றிய இக்காவியமும் முழுமையுமே சிறந்த பக்தி காவியமாகவே திகழ்கிறது. இன்றைய கர்நாடக சங்கீதத்தில் தியாகராஜரும், தீக்ஷிதரும், பத்ராச்சல ராமதாசரும், அருணாச்சல கவிராயரும் மற்றும் பலரும் கம்பராமாயணத்தின் பாடல்களின் சொல் மற்றும் பொருள் நயத்திற்க்கேற்ப, பற்பல கிருதிகளை பக்தி உணர்வு ததும்ப இயற்றியுள்ளார்கள். அவரின் விழியின் காட்சிகளை தங்களின் விழில் கண்டு, அவற்றை அழகிய பாடல்களாக, உருக்கொடுத்து, அவற்றிக்கு இனிய ராகம் தாளம் கூடி அமுதாய் வடித்துள்ளனர்.

**கம்ப இராமாயணத்தில் பக்தி:**

கம்பரின் இராமாயணம் தமிழ் இலக்கணப்படி விருத்தம் யாப்பில் சுமார் 10,500 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் அவரின் வருணனையும், ஆழ்ந்த கருத்துக்களும், வால்மீகி இராமாயணத்திலிருந்து அதிகம் பிழறாமல், மேலும் சுவை கூடி, தமிழ் இலக்கிய மரபுகளுக்கும் உணர்வுகளுக்கும் ஏற்றவாறு ஒரு "மாபெரும் கவிதையாக" புனைந்துரைத்தார்.

ஸ்ரீமத் பாகவதம் நவவித பக்தியை விளக்குகிறது. அதில் கீர்த்தனம் என்னும் பக்தி

இறைவனை அடையும் எளிமையான மார்க்கம் என்கிறது. மேலும்,

“க்ருதே யத் த்யாயதோ விஷ்ணு த்ரேதாயாம் யஜதோ மகைঃ

துவாபரே பரிசார்யாயம் கலௌ தத் தரி-கீர்த்தனாத்”- என்கிறது. (5) அதாவது சத்ய யுகத்தில் விஷ்ணுவைத் தியானிப்பதாலும், திரேதா யுகத்தில் யாகங்கள் செய்வதாலும், துவாபர யுகத்தில் பகவானின் தாமரைத் திருவடிகளுக்குச் சேவை செய்வதாலும் என்ன பலன் கிடைத்ததோ, அத்தனை பலன்களைக் கலியுகத்தில் பகவானின் மகிமைகளைப் பாடுவதன் மூலமே பெறலாம் என்கிறது. அவ்வாறாக கம்பர் தனது இராமாயணத்தின் ராம பக்தியின் பெருமையை பல பாடல்களில் விளக்கியுள்ளார். அதோடு ராமனின் ரூப அழகையும், அவரின் சிறந்த குணத்தையும், கருணையையும் , ராமனிடம் பக்தி செலுத்துவதே முக்தியை அளிக்கும் என்று கம்பர் வலியுறுத்துகிறார். அனுமனின் சேவை (தாஸ்யம்), குகனின் நட்பு(சக்யம்), பரதன் மற்றும் வீடனின் (விபீஷணன்) சரணாகதி (ஆத்ம நிவேதமம்) என பக்தியின் பல வடிவங்களை அழகாய் விளக்குகிறார். இன்றைய கர்நாடக சங்கீதத்திலும் பல வாக்கேயர்கள் ராமபக்தியையும், ராம நாம சிறப்பையும் பாடியுள்ளார்கள்.

**ராம பக்தி பாடல்கள்:**

கம்பர் தனது இராமாயணத்தில் "உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்" என்று இறை பக்தியோடு தொடங்குகிறார். தனது சிறப்பு பாயிரத்தில்

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராமவென் றிரண்டெழுத்தினால்"

என்று ராம நாமத்தின் சிறப்பினை கூறுகிறார்.

அவ்வாறே கர்நாடக சங்கீதத்தின் பிதாமகர் என்று அழைக்கப்படும் புரந்தர தாஸரும் தனது பல பாடல்களில் ராம பக்தியையும், ராம நாம பிரபாவத்தையும் பாடியுள்ளார். "ராமா மந்த்ர ஜபிசோ" என்ற பாடலில் ராம நாமம் எவருக்கும் முக்தியை தரும் என்கிறார். சதாசிவ பிரும்மேந்திரரோ "பிபரே ராம ரசம்" என்கிறார். இராமாயணம் என்னும் சுவையான பானத்தினை பருகுங்கள் அது மனித பிறவி பிணியை மாற்றும் என்கிறார். பத்ராச்சல ராமதாசரோ "ஓ ராம நீ நாம ஏமி ருச்சிரா" என்கிறார். அது சர்க்கரை, தேன் போன்றவற்றை விட சுவையானது, பிரகலாதனும் நாரதரும் சதா ஜபித்து பக்தி செய்த

நாமம் என்கிறார்.

ஆதி சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான அருணாச்சல கவி அவர்கள், கம்பரின் இராமயணத்தில் கவரப்பட்டு அவரை தனது மானசீக குருவாக கொண்டு இசை இராமாயணமான "இராம நாடகம்" இயற்றினார். இன்றைய கீர்த்தனை மற்றும் கிருதி என்ற சங்கீத பாடலின் அமைப்பில் அமைந்ததாய் பல பாடல்கள் இந்நூலில் உள்ளது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல இவரின் ஒரு பாடல் இந்நூலின் சிறப்பைச் சொல்லும் என்றால் அது அவர் இயற்றிய "யாரோ இவர் யாரோ" என்று பைரவி ராகத்தில் அமைந்த பாடல் ஆகும்.

எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி

கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று

உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட

அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள் ! –

என்ற கம்பரின் பாடலின் சொல் மற்றும் பொருள் நயத்தால் கவரப்பட்டு அதை போலவே அருணாச்சல கவி மிக அழகாக தனது பாடலை அமைத்துள்ளார்.

**சங்கீத மும்மூர்த்திகள்**:

சங்கீத மும்மூர்த்திகளில் தியாகராஜரோ இராமரை தனது இஷ்ட தெய்வமாக மட்டும் கருதாமல், தனது உயிர்மூச்சாகவே கருதினர். இராம பக்தியில் உருகி தனது ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தும் வகையில் ஆயிரக்கணக்கான கிருதிகளை இயற்றினார். கம்பரின் திரு அவதார பாடலைப்போல தியாகராஜ தனது "எந்தராணி தனகுவில்" என்ற கிருதியில் திருமாலே இராமராகவும், சிவ பெருமானும் அனுமனாகவும், தேவர்களும் இராமருக்கு உதவிடவே பூமியில் அவதரித்ததை பாடியுள்ளார். "மேலு மேலு ராம நாம" (சௌராஷ்டிரம் இராகம்) கீர்த்தனையில், ராமனின் நாமத்தைப் பாடுவதால் உடல், உணர்ச்சி மற்றும் அறிவு ஆகிய நிலைகளில் அனுபவிக்கப்படும் மகிழ்ச்சியையும் ஆன்மீக ஆனந்தத்தையும் விளக்குகிறார். கம்பரின் இராமாயணத்தில் சீதை தனது கைவளை சரி செய்வதாய் இராமனை நோக்கியதாக பாடலை இயற்றியுள்ளார்.

எய்வளைவி லேற்றது மிறுக்கன முரைத்தும்

பெய்விளை விடத்து மத லையம்விட அற்றாள்

ஐயனை யகத் துவடி வேயல புறத்தும்

கைவளை, திருச் தபு கடைக்கணி னுணர்க் தாள் -

என்று கவித்துவமாய் பாடியுள்ளனர். தியாகராஜரும் அதை தொடர்ந்து தனது "கன கன ருச்சிராவில்" - "ஸீத குலுகுசுனோர கன்னுலனு ஜூசு நின்னு" என்று பாடுகிறார். தியாகராஜரை தொடர்ந்து, திரு முத்துஸ்வாமி தீக்ஷிதரும் கம்பரின் பாடலான

முப் பரம்பொருளிற்குள் முதலை மூலத்தை
இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பத்தை
அப்பனை அப்பினுள் அமிழ்தை தன்னையேஒப்பனை ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ -

என்ற பாடலுக்கேற்ப தனது "ராமவிபக்தி கிருதி"-யில் "ராமச்சந்திரம் பாவயாமி" என்ற வசந்த ராகத்தில் அமைந்த பாடலில் ராமபிரானை முத்தொழிலுக்கு உரிய மாயவன் அவதாரம். அவரது நாமத்தைப் பாடுவது, உலகியல் சமுத்திரத்தைக் கடக்கும் தெப்பமாக அமைகிறது என்கிறார். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் தியாகராஜர் என்று அழைக்கப்படும் திரு பாபநாசம் சிவன் அவர்களும்

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழி அது ஆக்கும் வேரி அம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழிய வாகைசூடிய சிலை
இராமன் தோள் வலி கூறுவார்க்கே. - என்ற

கம்ப இராமாயண பாடலுக்கேர்ப்ப "இராமனை பஜித்தால் நோய் வினை தீருமே, சஞ்சலம் அகன்றிடுமே " என்ற பாடுகிறார். மேலும் சரணத்தில் "அவன் நாமாமிர்தம் செவிக்கு திவ்ய ஔஷதம்"என்கிறார். இவ்வாறாக இன்றைய கர்நாடக சங்கீதத்தில் பல வாக்கேயரும் கம்பரின் வழியில் பயணித்ததை காண முடிகிறது.

**முடிவுரை**:

பாரத நாட்டின் பொக்கிஷம் என்று கருதப்படும் ஆதி காவியமான இராமாயணம் பற்றிய செய்திகள் நமது தமிழ் இலக்கியங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே காணப்படுகிறது. ராமபிரானை பாடாத கவி இல்லை என்பார்கள். பார்போற்றும் ராமாயணத்தின் நாயகனான ராமனை பாடிய பெருமைக்குரியவர்கள் நமது தமிழ் குடிகள் என்பது ஐயமின்றி தெளிவாகிறது. அவர்களில் கம்பர் மகுடத்தில் ஒளிர் வைரமாய் விளங்குவதும், அவரின் காவியம் இன்றைய வாக்கேயர்களின் இசையில் மேலும் மெருகேற்றப்பட்டு இவ்வுலகம் உள்ளவரை நிலைத்திருக்கும் என்பது இவ்வாய்வில் புலனாகிறது.

**துணைநூற்பட்டியல்:**


1. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உறையும், புலியூர் கேசிகன், கரந்தைப்படலம், பாடல்- 35,பக்கம்- 35,சாரதா பதிப்பகம்,ஆண்டு- 2009
2. https://www.thehindu.com/society/history-and-culture/kamban-the-first-to-glorify-rama-nama/article26805190.ece.
3. தமிழிசை இலக்கிய வரலாறு, தொகுதி-1, மு. அருணாசலம், முகவுரை, பக்கம்- 1.
4. https://www.holy-bhagavad-gita.org/chapter/9/verse/31
5. ஸ்ரீமத் பாகவதம் 12.3.52 - https://vedabase.io/en/library/sb/12/3/52/